# மெட்ரோ ரெயில் பயணத்தின்போது

# முகக்கவசம் அணியாவிட்டால் ரூ.200 அபராதம் வசூலிப்பு!

## இன்று முதல் அமலாகிறது!!

சென்னை, ஏப். 11–
மெட்ரோரெயில்பயணத்தின் போது முகக்கவசம் அணியாவிட்டால் ரூ.200 அபராதம் வசூலிக்கப்படும் மெட்ரோ ரெயில்களில் இன்று முதல் இதனை மெட்ரோநிறுவனம்கடுமையாக்கி உள்ளது.

தமிழகத்தில் நாளுக்கு நாள்கொரோனாதொற்றுபரவல் அதிகரித்து வருகிறது. இந்தநிலையில்கொரோனா தொற்றில் இருந்து விடுபட தமிழக அரசு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து நேற்று முதல் அமல்படுத்தி வருகிறது. குறிப்பாக கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

இதற்கிடையே, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் முகக்கவசம் இல்லாமல் பொதுஇடங்களில் வருவோரிடம் ரூ.200 அபராதம் விதிக்கப்படும் என சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

சென்னைமெட்ரோரயில் நிலையங்களில்கொரோனா பர்துகாப்பு முன்னெச்சரிக்கைநடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும்,பயணிகள் உடல் வெப்பநிலையை பரிசோதித்த பிறகே, ரெயில் நிலையத்துக்குள்அனுமதிக்கப்படுகின்றனர்.

இந்நிலையில், சென்னை மெட்ரோ ரெயில் நிலையங்கள், மெட்ரோ ரெயில்களில் முகக்கவசம்இல்லாமல்பயணித்தாலோ அல் லது முகக்கவசம் முறையாக அணியாமல் இருந்தாலோ ரூ.200 அபராதம் விதிக்கப்படும் என்றும், இன்று முதல் இந்த நடைமுறையை செயல்படுத்த உள்ளதாகவும், இதற்காக மெட்ரோ ரயில் நிலையங்களில் சிறப்புக் குழு அமைத்து, கண்காணிப்பு மேற்கொள்ளஉள்ளதாகவும் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம்தெரிவித்துள்ளது.